

# ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்
# திருநள்ளாறு



## 08.06.2020 முதல் திருக்கோயில் பொது தரிசனத்திற்காகத் திறந்து பக்தர்கள் மேற்கொள்ள வேண்டிய வரையறுக்கப்பட்ட நடைமுறைகள்

1. பக்தர்கள் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து வர வேண்டும், தரிசனம் முடியும் வரை முகக்கவசத்தை விலக்கக் கூடாது.
2. ஒவ்வொரு பக்தரும் குறைந்தது 6 அடி சமூக இளைவெளியுடன் விட்டு குறிப்பிட்டுள்ள கோட்டிற்குள் வரிசையாக வரவேண்டும்.
3. பக்தர்கள் அவசியம் கோயில் நுழைவதற்கு முன்பாக கையை சோப்பு போட்டு நன்கு சுத்தமாகக் கழுவிய பின்பே தரிசனத்திற்கு வரவேண்டும்.
4. ஒருவரையொருவர் இடிக்காதபடி உரிய இடைவெளியில் தரிசனம் செய்ய வேண்டும்
5.சளி, இருமல், காய்ச்சல் மற்றும் சுகவீனமாக உள்ளவர்கள்,65 வயது மேற்பட்ட முதியோர்கள், கர்ப்பிணி பெண்கள், 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் தயவு செய்து பக்தர்களின் நலன் கருதி வருவதை தவிர்க்கவும், துப்புதல், தும்முதல் ஆகியன தவிர்க்கவும்.
6. தற்போது மூலவர் மற்றும் உற்சவர் தரிசனத்திற்காக மட்டும் நடை திறக்கப்படுவதால், ஏனையை நடைமுறை தீபாரதனை,அர்ச்சனை அபிஷேகம், அன்னதானம்,இதர பூஜைகள், பண்டு உற்சவங்கள் மற்றும் திருமணம், பெண் பார்த்தல் போன்றஎந்த நிகழ்வுகளும் நடைபெறாது.
7. ஒரு நாளைக்கு காலையில் ஆறுமணிநேரம் மற்றும் மாலையில் நான்கு மணிநேரம் ஆக மொத்தம் பத்து மணிநேர தரிசனம் மட்டும் அனுமதிக்கப்படும். அதாவது பொது தரிசனம் காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, பின்னர் நடைசாத்தப்படும்.மீண்டும் மாலை 4.00 மணிமுதல் 8.00 மணி வரை, பின்னர் நடைசாத்தப்படும். ஆனால் ஆறு கால பூஜைகள் வழக்கம் போல திருக்கோயில் முறைகுருக்களைக் கொண்டு உரிய காலநேரத்தில் பொதுமக்களின் தரிசனத்திற்கு இடையூறின்றி நடத்தப்படும்.
8. பொது தரிசன காலத்தில், குறிப்பாக பக்தர்களுக்கு கோயில் குருக்கள்கள் கையால் விபூதி, குங்குமம், சந்தனம் பூ மற்றும் அன்னம் போன்ற எந்த ஒரு பிரசாதமும் வழங்கப்படமாட்டாது.
9. பொதுமக்கள் விரைவாக தரிசனம் செய்தபின்னர் கோயில் உட்புறமோ அல்லது வெளிபுறமோ ஐந்து (5) நபர்களுக்கு மேலாக ஒன்று கூடுதல் முற்றிலும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இவண்

கட்டளை விசாரனை | நிர்வாக அதிகாரி (கோயில்கள்)